கூட்டம் எண்.1/2023 நாள்.09.01.2023

## சாதாரணக் கூட்டம்

குன்றத்தூர் நகராட்சியின் **ஜனவரி**-2023 மாதத்திற்கான சாதாரணக்கூட்டம் 09.01.2023ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 12.00 மணியளவில் நகரமன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்.1**

குன்றத்தூர் நகராட்சி ஆணையரின் நவம்பர்-2022 மற்றும் டிசம்பர்-2022ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.239 நாள்.09.01.2023**

**பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

குன்றத்தூர் நகராட்சியின் நவம்பர்-2022 மற்றும் டிசம்பர்-2022ம் மாதத்திய பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகள் பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கு.

| மாதம் | பிறப்பு | இறப்பு | இறந்து பிறந்தவைகள் |
|---|---|---|---|
| நவம்பர்-2022 | - | 35 | - |
| டிசம்பர்-2022 | - | 18 | - |

**தீர்மானம் எண்.240 நாள்.09.01.2023**

**பார்வையிடப்பட்டது.**

**பொருள் எண்.3**

குன்றத்தூர் நகராட்சியின் வரி மற்றும் வரியில்லா இனங்களின் டிசம்பர்-2022ம் மாத கேட்பு, வசூல், நிலுவைப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு.

| | கேட்பு ரூ லட்சத்தில் | வசூல் ரூ.லட்சத்தில் | நிலுவை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| வரியினம் | 198.4 | 118.9 | 79.51 |
| வரியில்லா இனம் | 16.74 | 6.25 | 10.49 |
| குடிநீர் கட்டணம் | 51.36 | 17.21 | 34.15 |

**தீர்மானம் எண்.241 நாள்.09.01.2023**

**பார்வையிடப்பட்டது.**

**பொருள் எண்.4**

குன்றத்தூர் நகராட்சியின் நவம்பர்-2022 மற்றும் டிசம்பர்-2022ம் மாத செலவுசீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

நவம்பர் -2022 - செ.சீ.எண்.339 முதல் 394 வரை

செ.சீ.எண்.5 முதல் 8 வரை (திட்டப்பணிகள்)

டிசம்பர் -2022 - செ.சீ.எண்.395 முதல் 422 வரை

செ.சீ.எண்.7 முதல் 35 வரை (Online)

**தீர்மானம் எண்.242 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.5**

குன்றத்தூர் நகராட்சியில் 2022-2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் 02.12.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு அவசர அவசியத்தினை முன்னிட்டு 07.12.2022 அன்று நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | நத்தம் பெருமாள் கோயில் தெரு, அம்மன் கோயில் தெருவில் சாலை Patch Work செய்தல் | 200000 | N.ஹேமபூசனம் | 0.05% குறைவு |
| | | | N.சிவக்குமார் | 0.45% அதிகம் |

**தீர்மானம் எண்.243 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.6**

குன்றத்தூர் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2021-22ன் (Tied Grant) கீழ் 09.12.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்பதிவேட்டினை பார்வையிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | மீஞ்சூர்-வண்டலூர் வெளிவட்டச் சாலையில் அமைந்துள்ள திடக்கழிவு மேலாண்மை திட்டப் பகுதிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல் | 46.83 | C.N.இராமச்சந்திரன் | குறைவு |
| | | | BR Constructions | அதிகம் |

**தீர்மானம் எண்.244 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.7**

குன்றத்தூர் நகராட்சியில் 2022-2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் நகராட்சி எல்லைக்குட்பட்ட பூங்காக்கள், நீர்நிலைகள் மற்றும் பொதுஇடங்களில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை சேகரம் செய்வதற்கு இரட்டை குப்பைத்தொட்டிகள் சப்ளை செய்ய 06.12.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s.CRSD Enterprises நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் பட்டியல் தொகை வழங்கவும் நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.245 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.8**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முட்புதர்கள் அகற்றுதல், கால்வாய் சுத்தம் செய்தல், குப்பைகள் அகற்றுதல், தேங்கிய மழைநீரை அகற்றுதல் மற்றும் இதர பொதுசுகாதார பணிகளுக்கு ஜே.சி.பி இயந்திரம் பயன்படுத்திக் கொள்ள இவ்வலுவலக துப்புரவு மேற்பார்வையாளர் கடிதத்தில் கோரியுள்ளதை தொடர்ந்து வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவசர அவசியத்தினை முன்னிட்டு ஜே.சி.பி இயந்திரம் மூலம் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொண்டமைக்கு ஸ்ரீ பாலாஜி எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | சுத்தம் செய்த நாள் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கன்னியப்பன் நகர் ரேஷன் கடை எதிரில் முட்செடிகள் சுத்தம் செய்தது மற்றும் கால்வாய் சுத்தம் செய்தது மற்றும் தேங்கிய மழைநீரை அகற்றியது | 10.11.2022 | ஸ்ரீ பாலாஜி எர்த் மூவர்ஸ் | ரூ.76554/- |
| 2 | கன்னியப்பன் நகரில் கால்வாய் சுத்தம் செய்தது, குப்பைகளை சுத்தம் செய்தது மற்றும் தேங்கிய மழைநீரை அகற்றியது | 11.11.2022 | | |
| 3 | பொன்னி நகரில் குப்பைகள் அகற்றியது மற்றும் மழைநீரை அகற்றியது | 12.11.2022 | | |
| 4 | மேத்தா நகர் 4வது, 6வது தெரு மற்றும் மேத்தா நகர் மெயின் ரோட்டில் கால்வாய் சுத்தம் செய்தது, மழைநீரை அகற்றியது | 13.11.2022 | | |
| 5 | தேவிநகர் ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி எதிரில் நீர்த்தேக்கத்தினை அகற்றியது, சிவந்தி பள்ளி எதிரில், நாகாத்தம்மன் கோயில் அருகில் முட்செடிகள் அகற்றியது | 14.11.2022 | | |
| 6 | திருப்பதி நகர் நீர்த்தேக்கம் அகற்றியது, நடைபாதை தெரு மெயின் ரோடு, கெங்கையம்மன் கோயில் அருகில் வெட்மிக்ஸ் நிரவியது மற்றும் குப்பைமேட்டில் குப்பைகளை சமன் செய்தது | 15.11.2022 | | |
| 7 | கன்னியப்பன் நகரில் கேபிள் லைன் எடுத்தது | 16.11.2022 | | |
| 8 | கன்னியப்பன் நகரில் EB கேபிள் லைன் எடுத்தது | 17.11.2022 | | |
| 9 | கன்னியப்பன் நகரில் ரோடு கிளினிங் செய்தது மரம் வேர் அகற்றியது | 18.11.2022 | | |
| 10 | டெட்ரோ கிராண்ட் சிட்டியில் முட்செடிகள் அகற்றியது மற்றும் கால்வாய் சுத்தம் செய்தது | 19.11.2022 | | |

**தீர்மானம் எண்.246 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.9</u>

குன்றத்தூர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022-23ன் கீழ் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்து வரப்பெற்றுள்ள கீழ்க்காணும் விவரப்படியான பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க மதிப்பீடுகள் அனுப்பி வைக்கக் கோரி வரப்பெற்றுள்ள இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.4489/2022/அ3 நாள்.21.11.2022 மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

| வ. எண். | பணியின் விவரம் | உத்தேச மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | திருநாகேஸ்வரம் காலனி அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 12.00 |
| 2 | நத்தம் அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 12.00 |
| | மொத்தம் | 24.00 |

**தீர்மானம் எண்.247 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.10</u>

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15 பேரூந்து நிலையம் பின்புறம் அமைந்துள்ள நவீன கட்டண கழிப்பிடத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் மற்றும் கழிப்பிடத்தின் சுவற்றில் வர்ணம் அடித்து பொதுசுகாதார விழிப்புணர்வு ஓவியங்கள் வரையவும், இச்செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.248 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.11</u>

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பேரூந்து நிலையத்தில் உள்ள தாய்மார்கள் பாலூட்டும் அறைக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு-

**தீர்மானம் எண்.249 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.12</u>**

குன்றத்தூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (Urban 2.0) திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு நுண் உரமாக்கல் மையம் (Micro Composting Centre) மற்றும் வளமீட்பு பூங்கா (Material Recovery Facilities) ஆகிய பணிகள் மேற்கொள்ள தலைமை செயலாளர், தலைமை செயலகம், சென்னை அவர்களால் 09.11.2022 அன்று நடத்தப்பட்ட தூய்மை இந்திய 2.0 திட்டத்தின் 4வது மாநில உயர் மட்டக்குழு கூட்ட நடவடிக்கைகள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை – 28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.20860/2022/SBM நாள்.05.12.2022ன்படி பணிகள் மேற்கொள்ள கீழ்க்காணும் விவரப்படியான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டமைக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு மண்டலம் அவர்களுக்கு உரிய கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மகா நகரில் நுண் உரமாக்கல் மையம் (Micro Compost Centre) அமைத்தல் | 46.00 |
| 2 | திடக்கழிவு மேலாண்மை திட்ட தளத்தில் (மீஞ்சூர் to வண்டலூர் புறவழி சாலை) நுண் உரமாக்கல் மையம் (Micro Compost Centre) அமைத்தல் | 46.00 |
| 3 | திடக்கழிவு மேலாண்மை திட்ட தளத்தில் (மீஞ்சூர் to வண்டலூர் புறவழி சாலை) வளமீட்பு பூங்கா (Material Recovery Facilities) அமைத்தல் | 43.00 |

**தீர்மானம் எண்.250 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.13</u>**

குன்றத்தூர் நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு ஜென்செட் கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.251 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.14</u>

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட திறந்தவெளி இடங்களில் (OSR) சுற்றுச்சுவர்கள் அமைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.252 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.15</u>

குன்றத்தூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் அறிவிப்புகள் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் கூடுதல் அலுவலக கட்டிடத்தின் பின்புறத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கழிப்பிடம் அமைக்கவும் மேலும் பழைய அலுவலக கட்டிடத்தில் ஏற்கனவே உள்ள கழிப்பிடத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், ரூ.20.00 இலட்சத்திற்கான இச்செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.253 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.16</u>

குன்றத்தூர் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கன்னியப்பன் நகர், ஜெகநாதபுரம், சம்மந்தம் நகர், மேத்தா நகர், நத்தம், கரைமாநகர், ஒண்டிக்காலனி பகுதிகள் வழியாக செல்லும் பொதுப்பணித்துறை கால்வாயினை சுத்தம் செய்தமைக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று M/s.KRS Service நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியது மற்றும் பட்டியல் தொகை ரூ.935400/- வழங்கவும் மன்றத்தின் ஒப்புலுக்கு.

**தீர்மானம் எண்.254 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.17</u>

குன்றத்தூர் நகராட்சியில் பொதுசுகாதார பணிகள் மேற்கொள்ளும் டிராக்டர் எண்.TN 22 AV 7119 மற்றும் TATA ACE எண். TN 85 L 1726 பழுதடைந்துள்ளதால் பொதுசுகாதார பணிகள் பாதிக்கப்படுவதாக இவ்வலுவலக துப்புரவு மேற்பார்வையாளர் கடிதத்தில் கோரியுள்ளதை தொடர்ந்து பொதுசுகாதார நலன் கருதி மேற்படி வாகனங்களை பழுதுநீக்கம் செய்யவும், இச்செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.255 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.18**

குன்றத்தூர் நகராட்சியில் கொசுமருந்து புகை அடிக்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால் நகராட்சி பகுதிகளில் புகை அடிக்கும் பணிகள் பாதிக்கப்படுகின்றன. எனவே பொதுசுகாதார அவசரஅவசியத்தினை முன்னிட்டு M/s.CRSD Enterprises நிறுவனத்தின் மூலம் கொசுமருந்து புகை அடிக்கும் இயந்திரம் பழுதுநீக்கம் செய்தமைக்கு பட்டியல் தொகை ரூ.55800/- வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.256 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.19**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சுற்றுலா தளங்களை கண்டறிந்து இணைப்பு சாலைகள் அமைக்கவும், அடிப்படை வசதிகள் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளவும் கருத்துரு சமர்ப்பிக்க சுற்றுலா அலுவலர், சுற்றுலா அலுவலகம், மாமல்லபுரம் அவர்களின் கடிதம் எண். Lr.No.549/TOMPM/2022 நாள்.26.08.2022ல் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து இந்நகராட்சியில் ஆன்மீக மற்றும் சுற்றுலா தலமாக விளங்கும் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்களின் வசதிக்காக கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள மாமல்லபுரம் சுற்றுலா அலுவலர் அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | முருகன் கோயில் மலைப்பாதையில் கூடுதல் பாதை அமைத்தல் | 61.00 |
| 2 | முருகன் கோயில் மலைப்பாதையில் சிறிய கோபுர விளக்குகள் (Minimass) மற்றும் LED மின்விளக்குகள் அமைத்தல் | 10.00 |
| 3 | முருகன் கோயில் பின்புறமுள்ள குளத்தில் செடிகொடிகளை அகற்றி தூர்வாரி சுத்தம் செய்தல் | 110.00 |
| 4 | முருகன் கோயில் மலையடிவாரத்தில் பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | 20.00 |
| | மொத்தம் | 201.00 |

**தீர்மானம் எண்.257 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.20**

குன்றத்தூர் நகராட்சியில் எல்லைக்குட்பட்ட 1 முதல் 30 வார்டு பகுதிகளில் வடகிழக்கு பருவமழை காரணமாக சேதமடைந்த சாலைகளை குவாரி ரப்பிஷ் மூலம் சரிசெய்தமைக்கு M/s.ரமேஷ் ஏஜென்சீஸ் நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.57000/- வழங்கவும், மேலும் இச்செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.258 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.21**

குன்றத்தூர் நகராட்சியில் 2021-22ம் ஆண்டிற்கான தணிக்கை ஆய்வு நடைபெற்றதை தொடர்ந்து தணிக்கை அறிக்கை, ஆண்டு கணக்குகள் மற்றும் வரவு செலவு கணக்குகள் ஆகியவற்றினை தட்டச்சு செய்து பிரிண்ட் எடுத்தமைக்கு திரு.R.முனுசாமி என்பவருக்கு தொகை ரூ.115000/- வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.259 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.22</u>**

அரசாணை (நிலை) எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.09.2021.ன்படி உள்ளாட்சி அமைப்புகளில் நீர்நிலைகள் புனரமைத்தல், பூங்காக்கள் அமைத்தல், பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்துதல், மரம் நடுதல், பள்ளிக்கூடங்கள் மேம்படுத்துதல், பொதுசுகாதாரம் மையம், கற்றல் மையங்கள், சாலைகள் மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ள தமிழக அரசால் நமக்கு நாமே திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை-28 அவர்களின் கடித ந.க.எண்.8880/2022/P1 நாள்.16.11.2022ன்படி, மேற்படி திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள கீழ்காணும் விவரப்படி அரசு மான்யம் மற்றும் பொதுமக்கள் பங்களிப்பு இலக்கு நிர்ணயம் செய்து வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | அரசு மான்யம் தொகை (ரூ. லட்சத்தில்) | குறைந்தபட்ச பொதுமக்கள் பங்களிப்பு தொகை (ரூ. லட்சத்தில்) | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 21.95 | 10.98 | 32.93 |

அதன்படி குன்றத்தூர் நகராட்சியில் 2022-23ம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின்கீழ் திட்டநிதி மற்றும் பொதுமக்கள் பங்களிப்பு தொகையுடன் கீழ்காணும் விவரப்படி பணி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1-ல் 12 எண்ணிக்கைகள் கண்காணிப்பு கேமரா சப்ளை செய்து பொருத்துதல் | 1.90 |
| 2 | வார்டு எண்.7-ல் 51 எண்ணிக்கைகள் கண்காணிப்பு கேமரா சப்ளை செய்து பொருத்துதல் | 10.30 |
| 3 | வார்டு எண்.18-ல்100 எண்ணிக்கைகள் கண்காணிப்பு கேமரா சப்ளை செய்து பொருத்துதல் | 16.00 |
| 4 | வார்டு எண்.27-ல் 48 எண்ணிக்கைகள் கண்காணிப்பு கேமரா சப்ளை செய்து பொருத்துதல் | 7.70 |
| 5 | வார்டு எண்.28-ல் 30 எண்ணிக்கைகள் கண்காணிப்பு கேமரா சப்ளை செய்து பொருத்துதல் | 6.00 |
| | மொத்தம் | 41.90 |

மேலும் வரப்பெற்ற நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் குடியிருப்போர் நலச்சங்க கடிதங்களில், மேற்படி திட்டத்தில் பொதுமக்களின் பங்களிப்பு தொகையாக மதிப்பீட்டு தொகையில் மூன்றில் ஒரு பங்கு தொகையினை வழங்க சம்மதம் தெரிவித்து இசைவு கடிதம் அளித்துள்ளனர்.

எனவே 2022-23ம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின்கீழ் மேற்காணும் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.260 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.23**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முட்புதர்கள் அகற்றுதல், கால்வாய் சுத்தம் செய்தல், குப்பைகள் அகற்றுதல், தேங்கிய மழைநீரை அகற்றுதல் மற்றும் இதர பொதுசுகாதார பணிகளுக்கு ஜே.சி.பி இயந்திரம் பயன்படுத்திக் கொள்ள இவ்வலுவலக துப்புரவு மேற்பார்வையாளர் கடிதத்தில் கோரியுள்ளதை தொடர்ந்து வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை மற்றும் அருள்மிகு நாகேச்சர சுவாமி திருக்கோயில் திருக்குட முழக்கு விழாவினை முன்னிட்டு அவசர அவசர அவசியம் கருதி ஜே.சி.பி இயந்திரம் மூலம் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொண்டமைக்கு கீழ்க்காணும் விவரப்படி ஸ்ரீ பாலாஜி எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | சுத்தம் செய்த நாள் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை திட்ட குப்பை மேடு சுத்தம் செய்தது மற்றும் நத்தம் பெருமாள் கோயில் கான்கிரீட் லோடிங் செய்தது | 30.11.2022 | ஸ்ரீ பாலாஜி எர்த் மூவர்ஸ் | 49805 |
| 2 | நத்தம் பெருமாள் கோயில் கான்கிரீட் லோடிங் செய்தது | 01.12.2022 | | |
| 3 | 14வது வார்டு துலுக்கத்தெருவில் உள்ள தோப்பில் பக்தர்களின் வசதிக்காக சுத்தம் செய்தது (Car Parking) | 02.12.2022 | | |
| 4 | அருள்மிகு நாகேச்சர சுவாமி திருக்கோயில் திருக்குடமுழக்கு விழாவினை முன்னிட்டு அப்பகுதியில் சுத்தம் செய்தது | 02.12.2022, 03.12.2022, 08.12.2022, 10.12.2022 | | |
| 1 | மேத்தா நகர் மெயின் ரோடு முட்செடிகள் சுத்தம் செய்தது | 04.11.2022 | ஸ்ரீ பாலாஜி எர்த் மூவர்ஸ் | 128011 |
| 2 | மேத்தா நகர் மெயின் ரோடு கால்வாய் சுத்தம் செய்தது | 05.11.2022 | | |
| 3 | பெரிய தெருவில் குளத்தினை சுற்றி சுத்தம் செய்தது | 05.11.2022 | | |
| 4 | 27வது வார்டு பெருமாள் கோயில் தெருவில் கால்வாய் சுத்தம் செய்தது | 06.11.2022 | | |
| 5 | 27வது வார்டு பகுதிகளில் கால்வாய் சுத்தம் செய்தது | 07.11.2022 | | |
| 6 | பெரிய தெருவில் குளத்தினை சுற்றி சுத்தம் செய்தது | 24.11.2022, 25.11.2022, 26.11.2022 & 27.11.2022 | | |
| 9 | திடக்கழிவு மேலாண்மை திட்ட குப்பை மேடு சுத்தம் செய்தது | 28.11.2022 | | |
| 10 | கரைமாநகர் செக்போஸ்ட் அருகில் முட்செடிகள் சுத்தம் செய்தது | 29.11.2022 | | |
| 11 | மேத்தா நகர் 1வது மெயின் ரோடு, 11வது தெருவில் முட்செடிகள் சுத்தம் செய்தது | 04.12.2022 | | |
| 12 | துலுக்கத்தெரு தோப்பில் உள்ள குப்பைகள் அகற்றியது மற்றும் மண் மேடுகளை சமன் செய்தது | 09.12.2022 | | |
| 13 | செந்தாமரை நகரில் முட்செடிகள் சுத்தம் செய்தது, மணஞ்சேரி கழிப்பிடத்தில் குப்பைகள் அகற்றியது | 14.12.2022 | | |
| 14 | மணஞ்சேரி ஐயர் சுடுகாடு முட்செடிகள் சுத்தம் செய்தது | 15.12.2022 | | |
| 15 | மெட்ரோ ஸ்டார் சிட்டி பகுதியில் மாடு இறந்ததை பள்ளம் எடுத்து புதைத்தது மற்றும் முட்செடிகள் சுத்தம் செய்தது | 16.12.2022 | | |
| | மொத்தம் | | | 177816 |

**தீர்மானம் எண்.261 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.24</u>**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட மெட்ரோ கிராண்ட் சிட்டி விரிவு பகுதியில் அமைந்துள்ள நாகேஸ்வரா பூங்காவில் பசுமை தமிழகம் / பசுமை குன்றத்தூர் திட்டத்தின் கீழ் துவக்கம் தொண்டு நிறுவனத்தின் CSR நிதி மூலம் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கவும் மற்றும் இதர மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.262 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.25</u>**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சேக்கிழார் நகரில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா பூங்காவில் பராமரிப்பு பணிகள் மற்றும் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளதால் புதியதாக மின்விளக்குகள் பொருத்துவதற்கு செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.263 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.26</u>**

குன்றத்தூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொதுமக்கள் தங்கள் ஆடபேசணை மற்றும் கருத்துக்களை தெரிவிப்பதற்கான அறிவிக்கைகளை நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்காணும் விவரப்படி பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ.எண். | விவரம் | நிறுவனத்தின் பெயர் | விளம்பரம் வெளியிட்ட நாளிதழ் / நாள் | பட்டியல் எண் / நாள் மற்றும் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளியில் மலம், சிறுநீர் கழித்தலற்ற நகராட்சியாக (ODF+) சான்று பெறுவது குறித்து பொதுமக்கள் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்களை தெரிவிப்பது குறித்த அறிவிக்கை | The Daily Thanthi, Chennai – 600007 | தினத்தந்தி / 21.11.2022 | 2223CNI111182187 / 21.11.2022 ரூ.9240/- |
| 2 | குன்றத்தூர் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெறுவது குறித்து பொதுமக்கள் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்களை தெரிவிப்பது குறித்த அறிவிக்கை | Kal Publications (P) Ltd Chennai – 600004 | தமிழ் முரசு / 03.12.2022 | 3300390303 / 03.12.2022 ரூ.2999.86 |
| 3 | | | தினகரன் / 03.12.2022 | 3300390266 / 03.12.2022 ரூ.5308.80 |

**தீர்மானம் எண்.264 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.27</u>**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதார பணிக்கு தனியார் வாகனம் மூலம் (3 எண்ணிக்கை TATA ACE) 01.11.2022 முதல் 30.11.2022 வரை மற்றும் 01.12.2022 முதல் 31.12.2022 வரை குப்பைகளை அகற்றியமைக்கு திரு.R.ஹரிஷ்குமார் என்பவருக்கு பட்டியல் தொகை ரூ.347700/-னை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.265 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.28</u>**

குன்றத்தூர் நகராட்சியில் நத்தம், மூன்றாங்கட்டளை பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பேரூந்து நிலையத்தில் உள்ள பொதுக்கழிப்பிடம் ஆகியவற்றினை ஆட்களை கொண்டு திரவ ஆசிட் மற்றும் பிளீச்சிங் பவுடர் மூலம் சுத்தம் செய்தமைக்கு M/s.KRS Service நிறுவனத்திற்கு ரூ.60,680/- வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.266 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.29</u>**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதார பணிக்கு பயன்படுத்தப்படும் காம்பேக்டர் வாகனம் பழுதடைந்துள்ளதால் பழுதுநீக்கம் செய்து பணி மேற்கொள்ளும் வரை தனியார் வாகனம் மூலம் குப்பைகளை அகற்ற பொதுசுகாதார அவசர அவசியத்தினை முன்னிட்டு விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதை குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.191 நாள்.21.10.2022ன்படி அங்கீகரிக்கப்பட்டதை தொடர்ந்து 01.11.2022 முதல் 30.11.2022 வரை மற்றும் 01.12.2022 முதல் 24.12.2022 வரை குப்பைகள் அகற்றியமைக்கு திரு.R.ஹரிஷ்குமார் என்பவருக்கு பட்டியல் தொகை ரூ.2,70,000/-னை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.267 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.30</u>

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குன்றத்தூர் ஆ கிராமம், நில அளவை எண்.459/3B & 460/2-ல் அடங்கிய 2671 ச.மீ (66 செண்ட்) பரப்பளவில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு.N.N.தணிகாசலம், எண்.282/2, முருகன் கோயில் தெரு, குன்றத்தூர், சென்னை 600069 என்பவரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும கடிதம் எண்.Layout-1/8095/2020 நாள்.05.12.2020ன்படி மாதிரி வரைபடம் அங்கீகரிக்கப்பட்டு மேற்படி மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்ட 761 சதுர மீட்டர், நகராட்சி பொதுபயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட 12 சதுர மீட்டர் மற்றும் TANGEDCO பொதுபயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட 12 சதுர மீட்டர் இடத்தினை குன்றத்தூர் சார்பதிவக பத்திரப்பதிவு எண்.7161/2021 நாள்.01.04.2021ன்படி தானபத்திரம் மூலம் பதிவு செய்து இந்நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் அவர்களின் கடிதம் எண்.Layout-1/8095/2020 நாள்.20.04.2021ல் மேற்படி நில அளவை எண்ணில் குடியிருப்பு மனை 16 எண்ணிக்கை மற்றும் வணிக பயன்பாட்டு மனை 2 எண்ணிக்கை அமைக்க திட்ட அனுமதி எண்.PPD/LO.No.69/2021 நாள்.20.04.2021ன்படி (அனுமதி எண்.14076) ஒப்புதல் அளித்து வரப்பெற்றுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிப்பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதை தொடர்ந்து அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் இறுதி அங்கீகாரம் வழங்குவதற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.268 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.31</u>

குன்றத்தூர் நகராட்சியில் சொத்துவரி, குடிநீர் கட்டணம் ஆகியவற்றில் இருமுறை பதிவேற்றம் செய்யப்பட்ட வரியினங்கள் மற்றும் முகவரி கண்டறிய இயலாத வரிவிதிப்புகளையும் நீக்கம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.269 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.32</u>

குன்றத்தூர் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கு மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகளாக பிரித்து வாங்குவதற்கு மின்சாரத்தால் இயங்கும் வாகனங்கள் (BOV) – 18 எண்ணிக்கை, மூன்று சக்கர மிதிவண்டி – 14 எண்ணிக்கை மற்றும் தள்ளுவண்டி – 6 எண்ணிக்கையில் இயக்கப்பட்டு வருகின்றது.

இவற்றில் தற்போது 18 எண்ணிக்கையிலான BOV நல்லமுறையில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 14 எண்ணிக்கை மூன்று சக்கர சைக்கிள் மற்றும் 6 எண்ணிக்கை தள்ளுவண்டிகள் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் இவ்வகை வாகனத்தில் பணியாளர்கள் குப்பைகளை வைத்து இழுப்பது மிகவும் சிரமமாக உள்ளது.

எனவே தற்போது திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் தொடர்பாக புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தேவையான KPI (Key Performance Indicator) தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எம்.ஆர்.சி.நகர், சென்னை அவர்களுக்கு பிரேரணை தயார் செய்து அனுப்பப்பட்டுள்ளது. இந்நிர்வாக அனுமதி வரும் வரை எதிர்வரும் 3 மாதங்களுக்கு 20 வண்டிகளுக்கு இணையாக 5 எண்ணிக்கையிலான LCV அல்லது வாடகை டிராக்டரை பயன்படுத்திக் கொள்ளவும், இச்செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.270 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.33</u>

திருப்பெரும்புதூர் (நெ) க (ம) ப உட்கோட்டத்திற்குட்பட்ட கோடம்பாக்கம் to திருப்பெரும்புதூர் சாலை கி.மீ 6/700 – 11/0 வரை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட மூன்றாங்கட்டளை மெயின் ரோடு பகுதியில் கி.மீ 10/100 – 11/10 உள்ள சாலையில் கி.மீ.10/4 (R/S)-ல் சாலையின் நடுவே 42 மின் கம்பங்களில் 84 மின் விளக்குகள் மற்றும் சேவை வரி தொகுப்பு பெட்டி (Service Line Box Set) பொருத்தப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளதாகவும் மேற்படி சாலையில் பொருத்தப்பட்டுள்ள மின்கம்ப விளக்குகளை குன்றத்தூர் நகராட்சியின் மூலம் மின்இணைப்பு பெற்று பராமரித்துக் கொள்ள கோரி வரப்பெற்றுள்ள உதவி பொறியாளர் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திருப்பெரும்புதூர் அவர்களின் கடிதம் எண்.196/2022/உ.பொ நாள்.08.12.2022 மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

**தீர்மானம் எண்.271 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.34**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளில் சுமார் 70000 மக்கள் தொகையினர் வசித்து வருகின்றனர். மேலும் 200க்கு மேற்பட்ட தொழில் நிறுவனங்கள், அருள்மிகு குன்றத்தூர் முருகன் கோயில் போன்றவற்றின் மூலம் தினசரி 19 டன் அளவிலான குப்பைகள் உற்பத்தியாகின்றன.

இக்கழிவுகளில் தினசரி சுமார் 5 டன் அளவில் மக்கும் கழிவுகள் மூலம் மண்புழு உரம் தயாரிக்கும் பணியும், 3 டன் அளவிலான மறுசுழற்சி கழிவுகளும் பயன்படுத்தப்பட்டது போக மீதமுள்ள 10 டன் அளவிலான எதற்கும் பயன்படுத்த இயலாத கழிவுகள் வண்டலூர்-மீஞ்சூர் வெளிவட்ட சாலை அருகில் கொட்டப்பட்டு வருகின்றது. இவ்வாறு கொட்டப்படும் இடம் சிறிய அளவில் உள்ளதால் அடிக்கடி குப்பைகள் வெளிவட்டப்பாதைக்கு வந்து விடுகின்றனது. இதனால் பொதுமக்களிடமிருந்து இருந்து பல்வேறு புகார்கள் வருகின்றன. மேலும் அடிக்கடி சமூக விரோதிகள் தீயிட்டு எரிப்பதால் பல்வேறு புகார்கள் வருகின்றன.

மேலும் அருகில் மீனம்பாக்கம் விமான நிலையம் அமையப் பெற்றுள்ளதால் இங்கு வரும் பறவைகளால் விமான போக்குவரத்துக்கு தடைகள் ஏற்படுவதாக தென் ஏர் இந்தியா நிறுவனத்தார் அவ்வப்பொழுது தகவல் தந்த வண்ணம் உள்ளனர். எனவே இவ்வாறான பல்வேறு பிரச்னைகளை களைவதற்கு தினசரி இங்கு சேகரமாகும் குப்பைகளை அருகில் உள்ள ஆப்பூர் குப்பை கொட்டுமிடத்திற்கு கொண்டு செல்ல தேவையான டிப்பர் லாரி, பொக்லைன் அல்லது ஜே.சி.பி இயந்திரம் பயன்படுத்தவும், லோடு அடிப்படையில் இப்பணிக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.N.ஹேமபூசனம் என்பவர் மூலம் இப்பணியினை மேற்கொள்ளவும், இதற்குண்டான செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண்.272 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.35</u>

குன்றத்தூர் நகராட்சியில் 2022-2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | அங்காள பரமேஸ்வரி நகர் 2, 3வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் கட்டுதல் மற்றும் உயர்த்துதல் மற்றும் அங்காளபரமேஸ்வரி நகர் 2வது தெரு மற்றும் முருகேசன் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1280000 |
| 2 | அங்காள பரமேஸ்வரி மெயின் ரோட்டில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 1950000 |
| 3 | காமராஜர் நகர் 3வது தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 1000000 |
| 4 | காமராஜர் நகர் 2வது தெரு மற்றும் சேக்கிழார் நகரில் மழைநீர் கால்வாய் உயர்த்தி கட்டுதல் | 930000 |
| 5 | காமராஜர் நகர் 1வது தெருவில் மழைநீர் கால்வாய் கட்டுதல் | 560000 |
| 6 | மீனாம்பாள் நகரில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 700000 |
| 7 | மீனாம்பாள் நகரில் தார்சாலை அமைத்தல் | 720000 |
| 8 | கரைமாநகர் சுடுகாட்டில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 2300000 |
| 9 | ஆண்டாங்குப்பம் சுடுகாட்டில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 2700000 |
| 10 | மணஞ்சேரி ஐயர் சுடுகாட்டில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 750000 |
| 11 | ஜெகநாதபுரம் ஐயர் சுடுகாட்டில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 1500000 |
| 12 | நத்தம் சுடுகாடு பராமரிப்பு பணி | 800000 |
| 13 | வார்டு எண்.4, மாணிக்கவாசகர் சாலை பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 780000 |
| 14 | வார்டு எண்.4 சர்ச் தெருவில் மழைநீர்வடிகால் கட்டுதல் | 470000 |
| 15 | சிவாவிஷ்ணு நகரில் கன்னியப்பன் தெரு, மாணிக்கம் தெரு, ரங்கநாதன் தெருவில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 620000 |
| 16 | நாவிதர் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 260000 |
| 17 | முத்துக்குமரன் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 570000 |
| 18 | மேத்தா நகர் பூங்கா மற்றும் மணிகண்டன் நகர் பூங்கா மேம்பாடு பணிகள் | 1500000 |
| 19 | ஐஸ்வர்யம் நகர் பூங்காவினுள் நடைபாதை மற்றும் விளையாட்டு பொருட்கள் மற்றும் வெளிப்புறம் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 2000000 |

| | | |
|---|---|---|
| 20 | அமராவதி குளம் சுற்றுச்சுவர் வர்ணம் அடித்தல் மற்றும் இதர மேம்பாட்டு பணிகள் | 450000 |
| 21 | அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மின்சார பணிகள் செய்தல் | 600000 |
| 22 | அமராவதி குளம் அனுகுசாலை (பேவர்பிளாக்) அமைத்தல் | 1400000 |
| 23 | மெட்ரோ ஹை டெக் சிட்டி பூங்கா நடைபாதை அமைத்தல் | 500000 |
| 24 | ஆண்டாங்குப்பம் மற்றும் நத்தம் பகுதிகளில் பயணியர் நிழற்குடை பராமரிப்பு பணி | 700000 |
| 25 | நத்தம் வள்ளுவன் சுடுகாடு சுற்றுச்சுவர் அமைத்தல் | 1980000 |
| 26 | கால்வாய்கரை தெரு, இரண்டாம்கட்டளை மெயின்ரோடு, என்.எஸ்கே.நகர், வ.உ.சி தெரு, முருகேசன் தெரு, லட்சுமி நகர், மாருதி நகர், ஆண்டாங்குப்பம் கன்னடபாளையம் பைப்லைன் அமைத்தல் | 520000 |
| 27 | ஒண்டிக்காலனி 4வது குறுக்கு தெரு பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 900000 |
| 28 | ஒண்டிக்காலனி 4வது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 470000 |
| 29 | தச்சத்தெரு தார்சாலை அமைத்தல் | 1670000 |
| 30 | சேக்கிழார் நகர் பூங்கா பராமரிப்பு பணி | 1500000 |
| 31 | சமுதாய நலக்கூடம் புதுப்பித்தல் பணி | 1500000 |
| 32 | வார்டு எண்.12, கங்கையம்மன் கோயில் தெரு தார்சாலை அமைத்தல் | 980000 |

**தீர்மானம் எண்.273 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**

**பொருள் எண்.36**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் 4 ஊராட்சி தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கு தயாராவது, போட்டித் தேர்வுக்கு தயார் செய்வது, மாதிரி வினா விடைகள் படித்து பயன் பெறுவது மற்றும் மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் விதமாக மாணவர்கள் நலன் கருதி தினசரி தமிழ் நாளிதழ் சலுகை விலையாக நாளிதழ் ஒன்று ரூ.4.00/- என்ற வீதத்தில் கீழ்க்காணும் விவரப்படியான பள்ளிகளுக்கு 30.12.2022 முதல் 31.03.2023 வரை (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்கள் நீங்கலாக) சப்ளை செய்ய மேலாளர் விற்பனை, தினகரன் நாளிதழ் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும், இச்செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதலுக்கு

| வ. எண். | பள்ளியின் பெயர் | முகவரி | தினசரி அளிக்கப்பட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி | கரைமாநகர் | 1 |
| 2 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி | மலையடிவாரம், நத்தம் | 1 |
| 3 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி | மேலாண்டை தெரு | 1 |
| 4 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி (கலப்பு) | லாலாசத்திரம் (குன்றத்தூர் பேரூந்து நிலையம் எதிரில்) | 1 |

**தீர்மானம் எண்.274 நாள்.09.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**